**செ.வெ.எண் :614** **நாள்: 22.09.2021**

இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி டேராடூனில் ஜீலை-2022-ம் பருவத்தில் சேர்வதற்கான தேர்வு 18.12.2021-ல் நடைபெறவுள்ளது. அதன் விபரங்கள் அடங்கிய முழு தொகுப்பு www.rimc.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் இணையதள முகவரியில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து 30.10.2021 மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

01.07.2022 தேதியன்று $11^{1/2}$ வயது முதல் 13 வயதை அடையாதவர், ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் அல்லது ஏழாம் வகுப்பு பயில்பவராக இருக்கும் அனைத்து முன்னாள் படைவீரர் சிறார்களும் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம்.

எனவே, தகுதியும் விருப்பமும் உள்ள முன்னாள் படைவீரர் சிறார்கள் இக்கல்லூரியில் சேர்ந்து பயனடையுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**